www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

நீலவண்ணன்

*குறிப்பு: நீலவண்ணன் எழுதிய, கமலம் பதிப்பகத்தின் (யாழ்ப்பாணம்) களம் பல கண்ட யாழ். கோட்டை (யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு) எனும் நூலின் முகப்புரை.*

## முன்னுரை

### 05, ஒக்டோபர், 1990.

நீண்ட காலத்திற்குப் பின்னர் கோட்டை வாயிலில் எனது மகளுடன் நின்றிருந்தேன். கோட்டைக்குள் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் நுழைகின்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கோட்டை முற்றுகைக் காலத்தில் கோட்டைக்குள்ளிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் எனது வீட்டிற்கு மேலாகக் கூவிச்சென்றன. விமானங்கள் யாழ் நகர் எங்கும் பரவலாகக் குண்டுகளை வீசின. ஹெலிகள் பிப்ரி கலிபரால் வீதிகளையும் வீடுகளையும் துளையிட்டன. அதனால் அடிக்கடி அகதிகளாக மாறி, இடம்பெயர்ந்து சந்தரோடையிலுள்ள எனது மைத்துனர் இ. கதிர்காமநாதன் வீட்டில் தங்கி வாழ நேர்ந்தது. கனத்துக்கிடந்த மனம் இன்று கோட்டை வாயிலில் நிற்கும் போது இலேசாகி சுதந்திரக் காற்றில் மிதப்பது போன்ற உணர்வு.

கோட்டைக் கதவுகள் திறந்து கிடந்தன. கோட்டை முற்றத்தில் பிரவேசித்து, சதுரங்க வடிவத் தேவாலயத்தைக் கடந்து, கோட்டையின் கிழக்கு மதிலிற்குச் செல்கின்ற படிகளில் ஏறினோம். முனியப்பர் கோயில் எதிரில் தெரிந்தது.

முனியப்பர் கோயிலிற்கு எதரேயுள்ள மதிலின் உச்சியிலிருந்து வடக்குப்பக்கமாக நடக்கில் வடகிழக்குக் கொத்தளம் வரும். சிறியதொரு விளையாட்டு மைதானத்தின் பரப்பினைப் பொதுவாகக் கொத்தளங்கள் உள்ளடக்கியிருந்தன. இந்த வட கிழக்குத் கொத்தளத்தில் பெரியதொரு ஆலமரம் வளர்ந்திருக்கின்றது. இக் கொத்தளத்தின் மூன்று காவலரண் கூடுகளில் இரண்டு விடுதலைப் புலிகளினால் தகர்ப்பட்டிருக்கின்றன. ஒன்று வீரசிங்கம் மண்டபத்தினை நோக்கியபடி ஓரளவு சிதைந்து நிற்கின்றது. இக்கொத்தளத்திலிருந்து பார்க்கும்போது முற்றவெளிக்கு அப்பால் உயர்ந்து காணப்படும் கட்டடங்கள், விமானக் குண்டு வீச்சுக்களால் அவை எவ்வளவு தூரம் சிதைக்கப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. யாழ்ப்பாண நூல்நிலையத்தின் கோள வடிவ உச்சிக்கோபுரத்தில் மூன்று நான்கிடங்களில் ஏவுகணைகள் தாக்கியதால் ஏற்பட்ட துவாரங்கள் தெரிகின்றன.

"அந்த நூல்நிலைய உச்சிக் கோளத்தினுள் இருந்து கொண்டு நமது வீரர்கள் இந்தக் கொத்தளத்தில் நடமாடுகின்ற பல சிறீலங்கா இராணுவ வீரர்களைச் சினைப்பர் மூலம் தாக்கிச் சரித்திருக்கிறார்கள். இங்கிருந்து ஏவப்பட்ட சினைப்பர் தாக்கி அந்த உச்சியிலிருந்து தாக்குதல் செய்துகொண்டிருந்த விடுதலைப் புலி வீரன் ஜெயராஜ் முதன் முதல் களப்பலியானார்..." என்றார் நமக்கு வழிகாட்டி அழைத்து வந்த வீரர்.

வடகிழக்கு கொத்தளத்தில் மழை வெயிலிற்காகச் சிறிய பந்தல்கள் சுவரோடு இடப்பட்டிருந்தன. உடைந்த அஸ்பெற்றர் தகடுகளால் கூரையிடப்பட்டிருந்தன. அப்பந்தல்களுள் நான்கு கட்டில்கள் காணப்பட்டன. ஒரு பக்கத்தில் அடுப்பு மூட்டிய அடையாளம் காணப்பட்டது. தலைக்கவசத்தை வைத்து நீர் கொதிக்க வைத்திருப்பதும் தெரிகிறது. மைசூர்ப் பருப்பு சிதறிக் கிடப்பதும் தெரிகிறது. பல்வேறு அளவுகளில் ரவைக்கூடுகளும் பிளாஸ்ரிக் ஷெல் உறைகளும் குவிந்து கிடக்கின்றன. அக்கொத்தளத்தில் காணப்பட்டபாரிய பொருளின் ஒரு பகுதியை நம்முடன் வந்த வீரர் சுட்டிக்காட்டினார். "இதுதான் பசீலன் 2000 என்ற நமது குண்டின் பான்... விசிறி. நான்கரை அடி உயரம். 50 கிலோ மருந்து... 400 யார் பாயக்கூடியது. சிறீலங்கா இராணுவத்தின் கொத்தளங்களைத் தகர்த்ததும், அவர்களைக் கிளிகொள்ளச் செய்ததும் பசீலன்தான். பசீலன் குத்தப்படுகின்ற சத்தம் கேட்டதும் கோட்டைக்குள் இருந்து, 'அம்மே அம்மே' என்ற அலறல் எழும்.... கோட்டையின் பல இடங்களிலும் நீங்கள் பார்க்கலாம். பசீலன் குண்டு செய்திருக்கின்ற காரியத்தை..."

மதில் பாதையில் பங்கர்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. பலகைகளையும் கோட்டைக் கட்டிடத் திராந்திகளையும் பயன்படுத்தி அமைத்திருந்தார்கள். பலமானவையாகக் காணப்படவில்லை. அத்துடன் மதில் பாதையில் அத்திவாரம் போல பங்கர்களை நெடுக வெட்டியிருந்தார்கள்.

"கோட்டையில் சிறீலங்கா இராணுவம் சும்மா நடந்தால் அவர்கள் தப்பமுடியாது. தலை வெளியில் தெரிந்தால் எங்கள் வீரர்களின் கரங்களிலிருந்து விடுபடுகின்ற சினைப்பர்கள் வீழ்த்திவிடும். அதனால், அவர்கள் இடம்மாறும்போது குவிந்தும், ஆழவெட்டிய இந்தப் பங்கர்கள்மூலமும் நடந்தனர்..."

நாங்கள் வடக்குப்புற மதிலில் நடந்தோம். ஒவ்வொரு பீரங்கித்துவாரங்களும் துப்பாக்கித் துவாரங்களாக்கப்பட்டிருந்தன. மண்மூடைகளை அடுக்கி அரண் செய்திருந்தனர். மதில் பாதையில் நடப்பதை விடுத்து, வெளிச்சுவரில் ஏறிப்பார்க்க விரும்பினோம். மதில் பாதையிலிருந்து மூன்று நான்கடி உயரமாக வெளிச்சுவர் இருந்தது.

"கவனம்... கவனம்... மிதிவெடிகள்...." என விடுதலைப் புலி வீரர் எச்சரித்தார்: "விழுந்தால் உட்பக்கமாகச் சரியுங்கள். முற்பக்கமாகச் சரிந்தால் நிச்சயம் மிதிவெடி மீதுதான் சரிவீர்கள்..."

கவனமாக ஏறி நின்று பார்த்தோம். எலும்புக்கூடுகளாச் சிதைந்து எஞ்சிநிற்கும் கட்டடங்கள் தெரிகின்றன. தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம், றீகல் தியேட்டர் அனைத்தும் தெரிகின்றன. எவ்வளவு விமானக்குண்டுகளையும், கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகளையும் ரவைகளையும் தாங்கிக்கொண்டு அவை நிற்கின்றன? அப்பக்க முற்றவெளியில் இரண்டு புல்டோசர்கள் நின்றிருந்தன. மதிலிற்கும் அகழிக்கும் அப்பால் வடக்குப் புறத்தாழ் கொத்தளத்தை அண்மி அவை நின்றிருந்தன.

"இந்தக் கோட்டையைக் கைப்பற்ற நாங்கள் எடுத்த முயற்சிகளில் ஒன்று அந்த வாகனங்கள், புல்டோசர்களையும், கிறேயின்களையும் கவசங்களாக்கி கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டோம். அம்முயற்சி வெற்றிதரவில்லை. புல்டோசர்களின் காற்றடைத்த ரயர்கள் இலகுவில் எதிரியின் தாக்குதலக்குள்ளாகி நகரமுடியாது போய்விட்டன.... அவற்றில் இரண்டு அவை. பண்ணைக்கரை வீதியில் இப்படியான வேறிரு வாகனங்களைக் காண்பீர்கள். அவை பாரிய கிறேயின்கள். வீரர்களை அப்படியே தூக்கி மதிலின் மேல் ஏற்றிவிடக்கூடியன. அவை விமான்க்குண்டுகள் தாக்கிய பாரிய குழிகளில் தவறி இறங்கிவிட்டதால், செயலிழந்துவிட்டன. முனியப்பர் கோயில் அருகிலும் ஒரு வாகனம் நிற்கின்றது."

தமது முயற்சிகளின் தோல்விகளை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். தமது பலத்தை அவர்கள் சரிவர மதிப்பிட்டிருக்கிறார்கள்.

அப்படியே நடந்து வடமேற்குக் கொத்தளத்திற்கு வந்தோம். அக்கொத்தளத்தில் கப்பி பிணைப்பதற்குரிய தூண்களுடன் சேர்ந்த ஒரு கிணறு காணப்பட்டது. நிலமட்டத்திலிருந்து உயர்த்தப்பட்ட உயர் கொத்தளத்தில் இப்படியொரு கிணறு இருக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. ரவைகள் வரும் இரும்புப் பெட்டியை வாளியாகப் பாவித்து, வயர் துண்டுகளை முடிந்து செய்திருந்த கயிற்றின் மூலம் தண்ணீர் அள்ளியிருந்தார்கள். அவை அவ்வாறேயிருந்தன. நாமும் ஒரு பெட்டி தண்ணீர் அள்ளி நாக்கில் விட்டுப்பார்க்க முயற்சித்தோம்.

"கவனம்... அதில் சயனைட் கலந்திருக்கலாம்..." என எச்சரிக்கை விடுதலைப் புலி வீரரிடமிருந்து வந்தது. நாக்கில் இட்ட நீரை வழித்துத் துப்பினோம்.

அந்தக் கொத்தளத்தில் நான்கு சிம்னிகள் வெளித்தெரிந்தன. காற்று உள்ளே செல்வதற்குரிய வழிகள் அவையென நான் எண்ணமிட்டேன். உண்மையில் அந்தக் கொத்தளத்தின் கீழ் இருட்டறைகள் இருந்தன. சிறைச்சாலையின் இருட்டறைகள் அந்தக் கொத்தளத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் அதற்குள் சென்று பார்த்தோம். வசதியான படுக்கைகளுடனும், தளபாடங்களுடனும், விசிறிகளுடனும் அந்த இருட்டறைகள் காணப்பட்டன. கோட்டையிலிருந்த இராணுவ அதிகாரிகள் தம்மை விடுதலைப் புலிகளின் ஏவுகணைகளிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக அந்த இருட்டறைகளில் தம்மைச் சிறைவைத்துக்கொண்டிருந்துள்ளனர் என அனுமானிக்க முடிந்தது.

மேற்குப்புறக் கோட்டை மதிலில் நடந்தோம். அகழிக்குள் நீர் நிறைந்திருந்தது. தொலைத்தொடர்புக்கட்டடம், பொலீஸ் விடுதிகளின் எச்சங்கள் தெரிந்தன. மேற்குப்புறச் சின்னக் கோட்டையும் (தாழ்கொத்தளம்) அகழிச்சுவரின் சிலவிடங்களில் உடைவுகளும் தெரிந்தன. கோட்டை மதிலிலிருந்து பெரியதொரு கயிறு அகழிக்குள் இறங்குவதையும் அவதானிக்க முடிந்தது. சின்னக் கோட்டைக்குள் மண்மூடைகள் அடுக்கி அரண் செய்யப்பட்டிருப்பதும் தெரிந்தது.

"மண்டைதீவிலிருந்து விசைப் படகுகள் மூலம் கோட்டைக் கரையில் கரையேற முயன்ற சிறீலங்கா இராணுவத்தினரில் தப்பிப்பிழைத்தவர்கள் இந்தச் சின்னக்கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். அங்கிருந்து பின்னர் அகழிக்குள் நடந்து கயிற்றின் மூலம் கோட்டைக்குள் நுழைந்து கொண்டனர்.... அந்த விடம் இதுவா?" எனக் கேட்டேன்.

"அப்படித்தான் சிறீலங்கா அரசு கூறுகிறது...." எனப் புலி வீரர் சிரித்தார்.

கோட்டை மதிலில் நடந்து பண்ணைக்கரை வீதிப்புற தென்மேற்குக் கொத்தளத்திற்கு வந்தோம். மேற்கில் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். அக்கொத்தளத்திலிருந்து யாழ்ப்பாணக் கடலைப் பார்ப்பது இனிமையான ஓர் அனுபவம். பண்ணைத் தாம்போதி சிலவிடங்களில் சிதைந்து கிடந்தது. தென்புறமாகச் சின்னத்தீவும் மண்டைதீவும் பசுமையாகத் தெரிந்தன. இவ்வளவு அனர்த்தங்களும் காரணமாகிவிட்ட அந்தத் தீவுகள் அமைதியாக உறங்கிக்கிடந்தன. கடலின் கரையில் சில மிதவைகள் தெரிந்தன. இரண்டு தகரப் பீப்பாக்களைப் பிணைத்து, அதிலிருந்து இரு தடிகள் சமநிலையைப் பேண இன்னொரு மிதவையுடன் பிணைக்கப்பட்டிருந்தன. அந்த பீப்பாக்களின் மேல் மண்மூடைகள் நான்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"இவற்றினை கடலிற்குள் இழுத்துச்செல்வோம். பின்னர் அதனையே கவராக வைத்து கடற்புலிகள் கடலிலிருந்து தாக்குதல்களைச் செய்வார்கள்." எனப் புலிவீரர் விளக்கம் தந்தார்.

கடற்கரை வீதியில் கிறேயின் ஒன்று பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று சிதைந்து கிடந்தது. மதிலின் உச்சியிலிருந்து குனிந்து பார்த்தோம். தலை சுற்றியது. கிடுகிடு செங்குத்து லொறி ஒன்றின் சிதைவுகள் காணப்பட்டன.

"கோட்டை மதிலைத் தாக்க நாம் எடுத்த முதல் முயற்சி, மண்மூடைகளும், வெடிமருந்துகளும் திணிக்கப்பட்ட லொறியை கோட்டை மதிலோடு மோதி தகர்க்கும் முயற்சி ஒன்றினைச் செய்து பார்த்தோம்."


குனிந்து பார்த்தோம். கொத்தளத்தின் மட்டத்திலிருந்து ஆறடி பதிவாக மதிலில் ஒரு சிறிய ஆலமரம் பலமாக வேரூன்றி முளைத்திருந்தது.

"அந்த ஆலமரத்தைப் பார்த்துக்கொண்டிருங்கள். அது நமது கோட்டைத் தாக்குதலிற்கு எவ்வாறு உதவியது என்பதைப் பின்னர் சொல்கிறேன்."

"இப்போதே சொல்லுங்கள்..." என்று ஆவலுடன் கேட்டோம்.

"பிறகு விரிவாகச் சொல்கிறேன்...."

(மிகுதி அடுத்த வாரம்)



படிப்பகம்